Press Release

1. சுப்ரதா பட்டாச்சார்யா மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) (சிஎ (CA) எண் 13301/2015) மற்றும் அது தொடர்புடைய மற்ற வழக்குகளில், பிப்ரவரி 02, 2016 தேதியில் உச்ச நீதிமன்றம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அந்த உத்தரவின்படி முன்னாள் தலைமை நீதிபதி, மதிப்பிற்குரிய திரு ஆர். எம். லோதா, அவர்களின் தலைமையின்கீழ், செபி, ஒரு குழுவை அமைத்து, பிஏசிஎல் (PACL) நிறுவனம் வாங்கிய நிலத்தை விற்று, அதன் மூலம் கிடைக்கும் வருவாயை அந்த நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களுக்கு திரும்ப வழங்கலாம் என உத்தரவிட்டது.

2. அதன்படி, பிஏசிஎல் (PACL) சொத்துக்களை விற்பனை செய்வதற்காகவும் அதன் மூலம் கிடைக்கும் தொகையை பிஏசிஎல் (PACL) நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளவர்களுக்கு திருப்பி கொடுப்பதற்கும், முன்னாள் தலைமை நீதிபதி, மதிப்பிற்குரிய திரு ஆர் எம் லோதா, அவர்களின் தலைமையின் கீழ் ஒரு குழுவை செபி அமைத்துள்ளது (இனி 'குழு' என குறிப்பிடப்படும்).

3. இந்தக் குழு நீதிமன்ற ஆணையின்படி இதுவரை ஈட்டிய தொகையிலிருந்து பிஏசிஎல் (PACL) முதலீட்டாளர்களுக்கு திருப்பி கொடுக்கும் பணியைத் தொடங்க முடிவு செய்துள்ளது. இதன் முதற்கட்டமாக பிஏசிஎல் லிடமிருந்து ரூ.2,500 வரை திரும்பப்பெற வேண்டிய தொகை (அசல்) கொண்ட முதலீட்டாளர்களின் கோரிக்கைகளை பெற இக்குழு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் திரும்ப கொடுக்கப்படும் தொகையானது, குழுவிடம் பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் குழுவிடம் இருக்கும் தொகையின் அடிப்படையில் சரி சம விகிதத்தில் அமையும் என்றும் கோரிக்கை வைத்த ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் ரூ.2500 திரும்ப கொடுக்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்க இயலாது என்பதையும் இதன் மூலம் தெளிவுபடுத்திக்கொள்கிறோம்.

4. மேற்கூறியவாறு, பிஏசிஎல் லிடமிருந்து (PACL) எந்த ஒரு முதலீட்டாளருக்கு திரும்பப் பெறவேண்டிய மொத்த நிலுவைத்தொகை (அசல்) ரூ.2500 வரை உள்ளதோ, அவர்கள் பின்வரும் விவரங்களை 562632 என்ற எண்ணிற்க்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது http://sebicommitteepaclrefund.com/ என்ற வலைத்தளத்தில் பதிவேற்றுவதன் மூலமாகவோ அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

   - முதலீட்டாளரின் பெயர் (பிஏசிஎல் (PACL) சான்றிதழ் படி)

   - கோரப்படும் தொகை (ரூ)

- கோரிக்கையாளரின் அலைபேசி (Mobile) எண்

- பிஏசிஎல் திட்ட பதிவு எண்

- ஸ்கேன் செய்யப்பட்ட பிஏசிஎல் சான்றிதழின் நகல்

- ஆதார் / பான் எண் (PAN)

- வங்கி கணக்கு எண் மற்றும் ஐஎப்எஸ்சி (IFSC) குறியீடு

- பிஏசிஎல் (PACL) மூலம் கோரிக்கையாளருக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதா.

- ஸ்கேன் செய்யப்பட்ட பான் (PAN) அட்டை / ஆதார் அட்டையின் நகல், மற்றும்

- கடைசி மூன்று பரிவர்த்தனைகளைக் காட்டும் முதலீட்டாளரின் சமீபத்திய வங்கி அறிக்கையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (பதிவேற்றிய சமீபத்திய வங்கி அறிக்கையில் தங்கள் பெயர், முகவரி, வங்கி கணக்கு எண் மற்றும் ஐஎப்எஸ்சி (IFSC) குறியீடு தெளிவாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

5. மேற்கூறியபடி, நிலுவைத்தொகையை திரும்பப் பெற விண்ணப்பிக்கும் முறையை விவரிக்கும் செயல்முறை விளக்கக் காணொளி http://sebicommitteepaclrefund.com/ இணையதளத்தில் உள்ளது. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் முன் இக்காணொளியை கவனமாக பார்க்கவும். தங்கள் விண்ணப்பங்களின் நிலையை அறிய <044-395-71985> என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

6. முதலீட்டாளர்கள் இது சம்பந்தமாக பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை அதில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படியே அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். வேறு எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. மேலும், முதலீட்டாளர்கள் தங்கள் அசல் பிஏசிஎல் (PACL) பதிவுச் சான்றிதழ்களை, குழுவிடமிருந்து குறிப்பிட்ட தகவல் வரும்வரை, வேறு எவரிடமும் ஒப்படைக்க வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறார்கள்.

7. நிலுவைத்தொகையை திரும்பப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி நாள் பிப்ரவரி 28, 2018 ஆகும்.